**மாகாண கல்வித் திணைக்களம் சபரகமுவ – வாராந்தப் பாடசாலை**

**விடயம் : குடியியற் கல்வி**

**வாரம் : 06**

**தரம் :06**

**தயாரிப்பு : மாவனல்லை வலயம்**

- பாடப்புத்தகத்தின் 3 ஆம் அலகு **"நற்பிரசை"** என்ற தலைப்பின் 3.6 **"வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவோம்"** என்ற உப அலகை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்க விடை தருக.

- இயற்கை எமக்கு அளித்துள்ளவற்றை வளமாக இனங்காணலாம். வளங்களை இரண்டு பிரிவாக வகைப்படுத்தலாம்.
- அவை :-
    I. இயற்கை வளங்கள்.
    II. மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள்.
- பூமியில் காணப்படுகின்ற பெரும்பான்மையான வளங்கள் சமமாக காணப்படுவதில்லை. சில வளங்கள் பயன்படுத்தும் போது அவை முடிந்து போகக் கூடியதாக இருக்கின்றன. அதன் காரணமாக அந்த வளங்களை சிக்கனமாக பாவிக்க வேண்டும்.
- **பயிற்சி**

01. இயற்கை வளங்கள் மற்றும் மனிதனால் உற்பத்தி செய்யப்பட்ட வளங்கள் என்பவற்றுக்கு உதாரணம் ஒவ்வொன்றுக்கும் 6 வீதம் தருக.
02. வளங்களை ஏன் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் 4 காரணங்கள் தருக.
03. பாடசாலை மாணவன் என்ற வகையில் வளங்களின் வீண்விரயத்தைக் குறைப்பதற்கு உங்களால் பங்களிப்பு செய்யக்கூடிய முறைகளை பின்வரும் தலைப்பின் கீழ் பட்டியற்படுத்துக.
    i. உணவு.
    ii. நீர்.
    iii. மின்சாரம்.
    iv. பாடசாலையில் உள்ள உபகரணங்கள்.
04. வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் 3ஐக் குறிப்பிடுக.
05. நீங்கள் பாவிக்கும் உபகரணங்கள் 5ஐக் குறிப்பிட்டு அவற்றை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள வளங்களை ( மூலப்பொருள் ) அதன் முன்னால் குறிப்பிடுக.